மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

18—

அங்கன்வாடி மையம்

***43872—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, உள்வாய் ஆதி திராவிடர் காலனியில் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகத்தில் விளைந்த தெய்வத் திருவுருவம், சுட்டாலும் நிறம் மாறாத பத்தரைமாற்றுத் தங்கம், மாண்புமிகு மக்களின் முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, மாண்புமிகு உறுப்பினரின் கேள்விக்குப் பதிலளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி ஒன்றியம், மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, உள்வாய் ஆதி திராவிடர் காலனி அங்கன்வாடி மையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.6 இலட்சத்து 30 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்மூலம் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

2014 டிசம்பர் 5]

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி அந்தமும் நம் அம்மாதான், நம்மை ஆளும் நீதியும் அம்மாதான், (மேசையைத் தட்டும் ஒலி) அகந்தையை அழித்து, ஆக்கத்தைக் கொடுக்கும் நம் மக்களின் முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

நாங்குநேரி தொகுதி, மூலக்கரைப்பட்டி பேரூராட்சி, உள்வாய் ஆதி திராவிடர் காலனியில் 50 குடும்பங்கள் வசித்து வருகின்றன. ½ கிலோ மீட்டர் தூரம் சென்று நாகல்குளம் கிராமத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில்தான் அவர்கள் கல்வி பயிலுகிறார்கள். எனவே, மேற்படி அங்கன்வாடிக்கு நிதி ஒதுக்கப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் என் சார்பிலும் நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மேலும், நாங்குநேரி தொகுதியில் எத்தனை அங்கன்வாடி மையங்கள் உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியிலே அங்கன்வாடி மையங்கள் கட்டுவதற்கு உத்தரவு அளித்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். ஆக, மாண்புமிகு அம்மா அவர்களுக்குத்தான் நன்றி தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி திருநெல்வேலி மாவட்டத்தில் புதியதாக கட்டப்படவிருக்கும் மொத்த மையங்களின் எண்ணிக்கை 150. நாங்குநேரி தொகுதியில் புதியதாக கட்டப்படவிருக்கும் மையங்களின் எண்ணிக்கை 35. நாங்குநேரி வட்டாரத்தில் 13, பாளையங்கோட்டை வட்டாரத்தில் 17, களக்காடு வட்டாரத்தில் 5 மையங்களும் அடங்கும். இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள உள்வாய் ஆதி திராவிடர் காலனி அங்கன்வாடி மையமும் அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. வைரமுத்து, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

19—

சொந்தக் கட்டடம்

***48105—திரு. பி.கே. வைரமுத்து:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதி, கீழாநிலை மற்றும் நெடுங்குடியிலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரியைக் கரம் பிடித்து அழைத்து வந்தது, கரிகால் பெருவளத்தானின் மறு வடிவம் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். முல்லைப் பெரியாற்றின் உரிமையைக் காத்திட்டவரும் எங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள்தான். அழுகின்ற குழந்தையின் பசியும், துடிக்கின்ற குழந்தையின் வேதனையும் ஒரு தாய்க்குத்தான் தெரியும். ஆம்! அந்தத் தாய்தான் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

முல்லைப் பெரியாற்றின் கொள்ளளவை முதற்கட்டமாக 142 அடியாக உயர்த்தி, ஐந்து மாவட்ட விவசாயிகளின் பசி போக்கிய பூமாதேவியே எங்கள் அம்மாதான். ஏர் இருக்கும் காலம் எல்லாம் எங்கள் அம்மாவின் பெயர் இருக்கும். உழவு நடக்கும் காலம் எல்லாம், ஏன் இந்த உலகம் இருக்கும் காலம் எல்லாம் எங்கள் அம்மாவின் புகழ் பாடும். (மேசையைத் தட்டும் ஒலி)